உ

கடவுள் துணை.


# செந்தமிழ்

தொகுதி—சரு.] சருவசித்து-௵ கார்த்திகை௴ [பகுதி—க.

Vol. 45. November—December 1947. No. I.


## இலக்கணவரம்பு

இலக்கணவரம்புடைமை நம் தமிழ்மொழிக்கு ஒரு தனிச்சிறப்பாகும். தமிழ்மொழி இன்பம்பயப்பதற்கு இலக்கணவரம்புடைமையும் ஒரு காரணமாகும். முத்தமிழுள் இயற்றமிழை முன்வைத்ததற்கும் காரணம் அதுவேயாம். இயற்றமிழ்—இலக்கணத்தமிழ் ஆதலால் அதன் இலக்கணவரம்பை யாம் என்றும் போற்றுதல் வேண்டும். போற்றாதொழியின் இஃது இன்னமொழியென்று தெரியாதவாறு தமிழ்மொழி சிதைந்து தன் இனிமையும் சிறப்பும் கெடும்.

உலகிலுள்ள பொருள்களெல்லாம் தத்தம் சிறப்பிலக்கணத்தானே வேற்றுமையடைகின்றன. சிறப்பிலக்கணம் இல்லையாயின் எல்லாப்பொருளும் ஒன்றாகவே காணப்படும். நிலம், நீர், தீ என ஒவ்வொருபொருளையும் வேற்றுமைப்படுத்துவது அதனதன் சிறப்பிலக்கணமே. [அவ்வாற்றைத் தருக்கநூல் நோக்கி அறிந்துகொள்க.] அதுபோலவே தமிழ்மொழியையும் அதன் சிறப்பிலக்கணமே ஏனைமொழிகளினின்றும் வேறுபடுத்திக்காட்டலோடு அதன் உயர்ச்சியையும் காட்டுகின்றது. அதுபற்றியே,

*

"கண்ணுதற்பெருங்கடவுளுங்கழகமோடமர்ந்து
பண்ணுறத்தெரிந்தாய்ந்தவிப்பசுந்தமிழேனை
மண்ணிடைச்சிலவிலக்கணவரம்பிலாமொழிபோ
லெண்ணிடைப்படக்கிடந்ததாவெண்ணவும்படுமோ"

என்று திருவிளையாடற்புராணத்துப் பரஞ்சோதிமாமுனிவரும் கூறினர். தனக்கென ஒரு தனிச் சிறப்பிலக்கணமில்லையாயின் தமிழ் மொழி ஏனைமொழிகளோடு ஒத்ததாகவே காணப்படும் என்க.

இனி, ஒவ்வொருபொருட்கும் அதனதன் இலக்கணமும் அஃதஃது தோன்றும்பொழுதே அமைந்துள்ளதாகும். அது போலவே தமிழ்மொழிக்கும் அதன் தனிச் சிறப்பிலக்கணமும் அது தோன்றும்பொழுதே அமைந்துள்ளதாகும். ஆதலால் அதனிலக்கணம் என்றும் ஒரு தன்மைத்தேயாம். அதனை யாம் மாற்றுதல் கூடாது. மாற்றின் அது தன் இலக்கணமிழந்து தன்னழகும் சிறப்பும் கெடும். கெடின் அதனை உயர்தனிச்செம்மொழி யென்று எவரும் மதிக்கமாட்டார். இதனை அறியாது இக்காலத்தார் சிலர், படித்தும் அமைத்தும் கொள்ளமுடியாமையாற்போலும், 'புலவன்போக்கைத் தடைசெய்தலின் இலக்கணம் வேண்டியதில்லை' என்றும், இலக்கியத்தின் அமைதியே இலக்கணமாதலின், இலக்கணமரபை நோக்காது தாம் செய்த பாட்டுரைகட்கெல்லாம் அவற்றினமைதியாக இலக்கணஞ்செய்யத்தகும் என்றும் பலவாறு கூறுவாராயினர்.

தமிழ்மொழிமரபின் இயல்பை நன்குநோக்கி அறிவின் முதிர்ந்த தமிழ்ச்சான்றோர்களாகிய நல்லிசைப்புலவர்கள் செய்த இலக்கியங்களெல்லாம் இலக்கணமமைந்தவாகவேயிருக்கும். ஆதலின் அவ்விலக்கியங்களைநோக்கியே, அகத்தியர் தொல்காப்பியர் முதலிய தொல்லாசிரியர்கள் பிற்காலத்தாரும் அவர்கள் செய்த முறையிற் றவறாமல் இலக்கியங்களைச்செய்துவரின் தமிழ்மொழி தன் நலங்குன்றாமலிருக்குமெனக்கருதி, அவ்விலக்கியங்களில்

அமைந்த எழுத்துச் சொற் பொருளிலக்கணங்களை யாராய்ந்து இலக்கணநூல்களைச் செய்துவைத்தார்களன்றி, அக்காலத்து நல்லிசைப்புலவர்களல்லாதார் செய்த இலக்கியங்களைநோக்கி இலக்கணநூல்களைச் செய்துவைத்தார்களல்லர். அங்ஙனமாதல்,

"வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணிப்
புலந்தொகுத்தோனே"

என்றுவரும் பனம்பாரனார்செய்த தொல்காப்பியப் பாயிரத்தானும்,

"மாத்திரை யெழுத்திய லசைவகை யெனாஅ
... ... ... ...
நல்லிசைப் புலவர் செய்யு ளுறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே"

என வரும் தொல்காப்பியச்சூத்திரத்தானும் அறியப்படும். [பாயிரத்துள் உலகமென்றது அறிவானுயர்ந்தோரை.] இன்னும் தாம் செய்துவைத்த இலக்கணமரபிற் றவறின் அத்தமிழ்மொழி இழுக்குறும் என்பது கருதியே தொல்காப்பியர்,—

"மரபுநிலை திரியிற் பிறிது பிறிதாகும்" எனப் பாதுகாவலும் செய்துவைத்தார் என்க.

மேலும், முச்சங்கப்புலவர்களும் அகத்தியம் தொல்காப்பியம் என்னும் இலக்கணநூல்களைத் தமக்கு இலக்கணமாகக்கொண்டே இலக்கியங்களை இயற்றினார்களென்பது, களவியலுரையானே நன்குணரப்படுமாதலானும், மரபழியாமல் இலக்கணவரம்பமைய வே இலக்கியங்கள் செய்யப்பட்டுவருதல் பண்டுதொட்ட வழக்காதல் அறியப்படும். அங்ஙனமாக, இலக்கணம் வேண்டியதில்லையென்றல் எவ்வாறு பொருந்தும்?

அன்றியும், தமிழென்பது பொதுவாகத் தமிழ்மொழியையும் சிறப்பாகத் தமிழிலக்கணத்தையும் உணர்த்திநிற்குமென்பது களவியலுரையினுள்ளே, "இந்நூல் என்னுதலிற்றோவெனின் தமிழ் நுதலியது" என்றும், "தமிழ் நான்குவகைப்படும்; எழுத்தும் சொல்லும் பொருளும் யாப்பும் என" என்றும் வருதலினால் அறியப்படுதலினாலும் இலக்கணமொழியாகிய தமிழுக்கு இலக்கணம் வேண்டாவென்றல் தமிழ்மொழியையே வேண்டாமென்றல் போன்று பயனில்கூற்றாகிமுடிதல் காண்க.

பழையசொற்கள் சில இறத்தலும் புதியசொற்கள் சில தோன்றலும் இயல்பாகலின் இறந்த சொற்களை நீக்கியும் புதியசொற்களைக் கொண்டும் இலக்கியங்களை இயற்றுதற்குக் "கடிசொல்லில்லை காலத்துப்படினே" என்று தொல்காப்பியரும் "பழையன கழிதலும் புதியன புகுதலும்—வழுவல கால வகையி னானே" என்று நன்னூலாரும் கூறிய விதிகொண்டு புதுச்சொற்களைச் சேர்த்துப் பாட்டுரைகளை இயற்றவிரும்பின் இழிசனர்வழங்கும் வழுவமைந்த வழக்குமொழிகளையும் தமிழுருவாகத் திரிக்காதபிறமொழிச்சொற்களையும் சேர்த்து இயற்றாது தமிழறிவிற்சிறந்த சான்றோர்வழங்கும் வழக்குச்சொற்களையும் தமிழுருவாகத்திரித்த பிறமொழிச் சொற்களையுமே சேர்த்துஇயற்றல்வேண்டும். என்னை? அவர்களுக்கே வழுக்களைந்து சொற்களை ஆக்கிவழங்கல் கூடுமாகலின். அதுபற்றியே, தொல்காப்பியரும் "வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே-நிகழ்ச்சி யவர்கட் டாகலான" என்று கூறினார் என்க. அன்றி, அவ்விதி கடந்து, தமிழ்மொழிமரபறியாத இழிசனர்பேசும் வழக்குமொழிகளையும் தமிழுருவாகத்திரிக்காத பிறமொழிச்சொற்களையுஞ் சேர்த்து இயற்றின் தமிழ்மொழி உருத்தெரியாதவாறு சிதைந்து கெடும் என்க. அங்ஙனமாகவும் தாம் வேண்டியவாறு வழுவமைந்த இழிசனர்பேசும் வழக்குமொழிகளையும் தமிழுருவாகத்திரிக்காத பிறமொழிச்சொற்களையும் சேர்த்துப் பாட்டுரைகளை இயற்றிவிட்டு அவற்றின் அமைதியாக இலக்கணஞ்செய்யத்தகும் என்றல் பொருத்தமில்கூற்றேயாம். என்னை? இலக்கணவரம்புபட்ட

சொற்களுக்கேயன்றி இலக்கணவரம்புட்படாத சொற்களுக்கு இலக்கணமில்லையாதலின்.

இன்னும் இலக்கியமும் இலக்கணமும் எள்ளும் எண்ணெயும் போலத் தம்முள் ஒன்றையொன்று இன்றியமையாதனவேயாம். அதுபற்றியே "இலக்கியமின்றேல் இலக்கணமின்றே—எள்ளுமின்றேல் எண்ணெயுமின்றே—எள்ளினின் றெண்ணை யெடுப்பதுபோல—இலக்கியத்தினின் றெடுபடும் இலக்கணம்" என்று அகத்தியனார் கூறினார் என்க. எனவே எண்ணெயில்லாத எள்ளுப்பதர் கொள்ளப் படாததுபோல இலக்கணமில்லாத இலக்கியமும் கொள்ளப்படா தென்க. இலக்கியத்தின் அமைதி இலக்கணமெனவே இலக்கணம் அமைந்ததே இலக்கியம் என்பதும் பெறப்படும். ஆதலின் மாணிக்க மணியின் இலக்கணம் அறிந்த ஒருவனால் இலக்கணம் அமை யாத ஒரு மாணிக்கமணி மதிக்கப்படாததுபோலவும், குதிரையி னிலக்கணமறிந்த ஒருவனால் இலக்கணமமையாத ஒரு குதிரை மதிக்கப்படாததுபோலவும், பெண்மகளினிலக்கணமறிந்த ஓர் ஆண் மகனால் இலக்கணமமையாத ஒரு பெண்மகள் மதிக்கப்படாமை போலவும் பாட்டுரைகளின் இலக்கணமறிந்த ஒரு நல்லிசைப்புலவ னால் இலக்கணமமையாத பாட்டுரைகளும் (இலக்கியங்களும்) மதிக் கப்படாவென்க. அதனாற்றான் அக்காலத்திலே பாட்டுரைகளை யியற்றினோர் தம் பாட்டுரைகள் நல்லிசைப்புலவர்களால் மதிக்கப் படல்வேண்டுமெனக்கருதி அரங்கேற்றலை மேற்கொண்டதூஉம் என்க. அன்றியும், அக்காலத்திலே தமிழிற் சிறந்த நல்லிசைப் புலவர்களைத் தங்கள் அவைக்களத்து வித்துவான்களாக்கித் தமி ழரசர்கள் வைத்திருந்ததும் அவர்களால் தம்மேற் புலவர்கள்பாடி வரும் கவிகளின் தகுதியறிந்து பரிசிலளித்தற்கேயாமாதலானும் பாட்டுரைகள் நல்லிசைப்புலவர்களாலேயே என்றும் மதிக்கப்படு தல்வேண்டுமென்பது பெறப்படுமென்க. ஆதலால் நல்லிசைப்புல வர்களல்லாத ஏனையோர்களால் மதிக்கப்படுதலானே பாட்டுரைகள் மேன்மையடையாவென்க.

இனி, இக்காலத்தில் இலக்கணவரம்புட்படாத பாட்டுரைகளை மதிப்பவர்கள் யாரெனின்? ஆங்கிலம் பெரிதும் தமிழ் சிறிதும் கற்றறிந்தவர்களே. இவர்களுக்குத் தமிழ்மொழியின் இயல்பும் சிறப்பும் பாட்டுரைகளின் இயல்பும் நயமும் புலப்படா. ஆதலின் இவர்கள் மதிப்பதாற் பயனில்லை என்க. இவர்கள் முற்பட்டு மதித்தலாற்றான் தமிழை முறையுறக்கற்றறிந்த நல்லிசைப்புலவர்களெல்லாம் மௌனிகளாயினார்போலும். தமிழை முறையுறக்கற்றாலொழிய, ஆங்கிலவறிவைக்கொண்டு தமிழ்க்கடலை அளக்கமுடியாதென்க.

இனி, மிகப்பழையநூலாகிய தொல்காப்பியம் இக்காலத்திற்கு இலக்கணமாகாதாகலின் நன்னூலையே இலக்கணநூலாகக்கொண்டாற் போதும் என்பாரும் உளர். தமிழ்நிதிக்கோர் வைப்பிடமாய் விளங்கும் தொல்காப்பியநூலை யாம் நீக்கின் தமிழ்நாட்டாரின் பழையகொள்கைகளையும், தமிழிற்கே சிறப்பாகவுள்ள பொருளிலக்கணத்தையும், கடைச்சங்க இலக்கியங்களின் சொற்பொருண் முடிபுகளையும் யாம் இனிதுணர்தல் கூடாதாகலின் அவர்கூற்றுப் பொருந்தாதென்க. அன்றியும் அக்கூற்று அந்நூற்கடலிற் குளித்து அதன் ஆழத்திற்கிடக்கும் அரும்பொருண்மணிகளை எடுத்துப் பயன்படுத்தஇயலாதார்கூற்றேயாமாதலின் அக்கூற்றுத் தமிழ்ப் பேரறிஞர்களால் ஒதுக்கப்படுமென்க. நிற்க.

யாம் இங்கே கூறியகருத்தினை நோக்கி உண்மையை ஆராய்ந்து தமிழ்மொழியின் இலக்கணவரம்பைப் பாதுகாப்பதற்கு, மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவர்களும் ஏனைத் தமிழ்ப்புலவர்களும் முயற்சிப்பார்களென எண்ணுகின்றேம்.

இங்ஙனம்,

சி. கணேசையர்.

---

உ

# நம்பியாண்டார் நம்பிகாலம்

உயர்திரு. T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள்,
ஆசிரியர், அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.

நம்பியாண்டார்நம்பியென்பார் சிதம்பரத்திற்குமேற்கேயுள்ள திருநாரையூரிலிருந்த ஓர் ஆதிசைவ அந்தணராவர். இவர் இளமையிற் பொல்லாப்பிள்ளையாரை வழிபட்டு அருள்பெற்றவர் என்பதும் இராசராச அபயகுலசேகரன் வேண்டிக்கொண்டவாறு சைவசமய குரவர்களும் பிற சிவனடியார்களும் பாடியருளிய பதிகங்கள் எல்லாவற்றையும் தேடிப் பதினொருதிருமுறைகளாக வகுத்துத் தொகுத்தவர் என்பதும் திருமுறைகண்டபுராணத்தால் அறியப்படுகின்றன[1]. அந்நூலிற் குறிப்பிடப்பெற்ற இராசராச அபயகுலசேகரன் என்பான் முதல் இராசராசசோழனாவன் என்றும் அவ்வேந்தனே நம்பியாண்டார்நம்பியின் துணைகொண்டு திருமுறைகளைத் தேடிக் கண்டு, பின்னர் அவற்றைத் தொகுப்பித்தவன் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். அதுபற்றியே அம்மன்னனும் திருமுறைகண்டசோழன் என்று வழங்கப்படுகின்றனன். தமிழகச் சைவசமய வரலாற்றில் உறுதிப்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் இக்கொள்கையிற் சில ஐயங்கள் தோன்றுவதால் இதனை மீண்டும் ஆராய்வது இன்றியமையாததாகும்.

நம்பியாண்டார்நம்பி இயற்றிய பத்துநூல்கள் பதினோராந் திருமுறையிற் காணப்படுகின்றன. அவற்றுள், திருத்தொண்டர் திருவந்தாதி என்பதும் ஒன்றாகும். அது, சேக்கிழாரடிகள் திருத்தொண்டர்புராணமாகிய பெரியபுராணம்பாடுவதற்கு ஆதாரமாகக் கொண்ட நூல்களுள் ஒன்று. அவ்வுண்மையை,

---

1 திருமுறைகண்டபுராணம், பாடல்கள் 24—29.

"அந்த மெய்ப்பதி கத்தடி யார்களை
நந்த நாதனும் நம்பியாண் டார்நம்பி
புந்தி யாரப் புகன்ற வகையினால்
வந்த வாறு வழாமல் இயம்புவாம்" [1]

என்னும் அவ்வடிகளது திருவாக்கினால் நன்கறியலாம். எனவே, திருத்தொண்டர்வரலாற்றை மிகச் சுருக்கமாகக்கூறும் வகை நூலாகிய திருத்தொண்டர்திருவந்தாதி நம்பியாண்டார்நம்பியினால் இயற்றப்பெற்றது என்பதிற் சிறிதும் ஐயமில்லை. அந்நூல், தொகையடியார் ஒன்பதின்மர், தனியடியார் அறுபத்துமூவர் ஆகிய எழுபத்திரண்டு சிவனடியார்வரலாற்றையும் எண்பத்தொன்பது இனியபாடல்களிற் கூறுகின்றது. தனியடியார்களை அறுபத்து மூவர் என்று கணக்கிட்டு முதலில் உணர்த்தியவர் நம்பியாண்டார் நம்பியேயாவர்.

இப்பெரியார், தமது திருத்தொண்டர்திருவந்தாதியில், புகழ்ச்சோழர், இடங்கழியார், கோச்செங்கட்சோழர் ஆகிய அடியார்களைப்பற்றிய பாடல்களில் தம் காலத்துச் சோழமன்னன் ஒருவனைக் குறிப்பிட்டுள்ளனர். தம்மை அன்புடன் ஆதரித்துப் போற்றிவந்த அரசர், வள்ளல் முதலானோரின் பெயர்கள் என்றும் நின்று நிலவுமாறு அவர்களைத் தம்நூல்களிற் புகழ்ந்துபாடிவைப்பது நம் தமிழ்நாட்டில் முற்காலத்தில் வாழ்ந்த புலவர்பெருமக்களின் வழக்கம் என்பது தொன்னூலாராய்ச்சியுடையார் யாவரும் அறிந்ததொன்றாம். அத்தகைய செயல் புலவர்களின் நன்றிமறவாமையாகிய அருங்குணத்தை உணர்த்தும் எனலாம்.

பாரதவெண்பாவின் ஆசிரியர் பல்லவ அரசனாகிய தெள்ளாறெறிந்த நந்திவர்மனையும், கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் வெண்ணெய்நல்லூர்ச் சடையவள்ளலையும், சேக்கிழாரடிகள் மூன்றுங் குலோத்துங்கசோழனையும், புகழேந்திப்புலவர் முரணைநகர்ச் சந்திரன்

---

[1] பெரியபுராணம், திருமலைச்சிறப்பு, பா. 39.

சுவர்க்கியையும், வில்லிபுத்தூராழ்வார் கொங்கர்கோமானாகிய வரபதியாட்கொண்டானையும், அருணகிரிநாதர் விசயநகரவேந்தனான இரண்டாம் தேவராயனையும், துறைமங்கலம் சிவப்பிரகாசமுனிவர் அண்ணாமலைரெட்டியாரையும் நன்றிபாராட்டுமுறையிற் புகழ்ந்துபாடியிருத்தலை அப்புலவர்பெருமான்கள் இயற்றியுள்ள நூல்களிற் காணலாம்.

சைவப்பெரியாராகிய நம்பியாண்டார்நம்பியும் தம்மை அன்புடன் ஆதரித்துவந்த ஆதித்தன் என்ற சோழமன்னன் ஒருவனைத் தம் திருத்தொண்டர்திருவந்தாதியில் மூன்றுபாடல்களிற் பாராட்டியுள்ள செய்தியை அந்நூலை ஒருமுறை படிப்போரும் உணர்ந்து கொள்ளலாம். அப்பாடல்கள்,

'புலமன்னியமன்னைச் சிங்கள நாடு பொடிபடுத்த
குலமன்னியபுகழ்க் கோகன நாதன் குலமுதலோன்
நலமன்னியபுகழ்ச் சோழன தென்பர் நதசுடர்வாள்
வலமன்னிய எறிபத்தனுக் கீந்ததோர் வண்புகழே' (திரு. அ. 50)

'சிங்கத் துருவனைச் செற்றவன் சிற்றம் பலமுகடு
கொங்கிற் கனக மணிந்த ஆதித்தன் குலமுதலோன்
திங்கட் சடையர் தமரதேன் செல்வ மெனப்பறைபோக்
கெங்கட் கிறைவன் இருக்குவே ளூர்மன் இடங்கழியே' (ஷை-65)

'செம்பொன் அணிந்துசிற் றம்பலத் தைச்சிவ லோகமெய்தி
நம்பன் கழற்கீ ழிருந்தோன் குலமுதல் என்பர்நல்ல
வம்பு மலர்த்தில்லை ஈசனைச் சூழ மறைவளர்த்தான்
நிம்ப நறுந்தொங்கற் கோச்செங்க ணானெனும் நித்தனையே' (ஷை-82)

என்பனவாம். இவற்றில் அச்சோழன் கொங்குநாட்டிலிருந்து பொன்கொணர்ந்து தில்லைச்சிற்றம்பலத்தைப் பொன்வேய்ந்தவன் என்றும், ஈழநாட்டை வென்றவன் என்றும், புகழ்ச்சோழர் கோச்செங்கட்சோழர் ஆகிய அடியார்களைத் தன் முன்னோர்களாகக் கொண்டவன் என்றும் இவ்வாசிரியர் கூறியது உணரற்பாலதாகும். ஆகவே, இப்புலவர்பெருமான் அவ்வரசன்காலத்தில் இருந்திருத்தல்வேண்டும் என்பது தேற்றம். இனி, அவ்வேந்தன் யாவன்? என்பது ஆராயற்பாலதாம்.

சோழமன்னருள் ஆதித்தன் என்னும் பெயருடையார் இருவர் உள்ளனர். அவர்களுள் முதல்வன், பரகேசரி விசயாலயசோழன் புதல்வனாகிய முதல் ஆதித்தசோழன் என்பான். மற்றையோன் சுந்தர சோழன் மூத்தமகனும் முதல் இராசராசசோழன் தமையனுமாகிய இரண்டாம் ஆதித்தசோழன் ஆவன். அவனை ஆதித்த கரிகாலன் என்றும் அந்நாளில் வழங்கியுள்ளனர். அவன் தன் தந்தையினாட்சியில் இளவரசனாகவிருந்தகாட்களிற் சில அரசாங்க அலுவலாளர்களாற் கொல்லப்பட்டுப்போனான் என்பது தென்னார்க்காடுஜில்லா சிதம்பரந்தாலூகாவிலுள்ள உடையார்குடியிற் காணப்படும் ஒரு கல்வெட்டால்[1] அறியப்படுகின்றது. எனவே, அவ்வரசிளங்கோ தன் இளமைப்பருவத்திற் கொலையுண்டிறந்தமை தெள்ளிது. ஆகவே, அவன் சிற்றம்பலத்தைப் பொன்வேய்ந்து சிவலோகமெய்தினான் என்று கூறுவதற்குச் சிறிதும் இடமில்லை. இந்நிலையில், சிற்றம்பலத்தைப் பொன்வேய்ந்ததாக நம்பியாண்டார்நம்பி தம் திருத்தொண்டர் திருவந்தாதியிற் குறிப்பிட்டுள்ள ஆதித்தன் என்பான், விசயாலயசோழன்புதல்வனும் முதற்பராந்தகசோழன் தந்தையும் கி. பி. 870 முதல் 907 வரையில் சோழமண்டலத்தை ஆட்சிபுரிந்த பெருவேந்தனுமாகிய முதல் ஆதித்தசோழனேயாவன். இவன் பல்லவஅரசனாகிய அபராசிதவர்மனைப் போரில் வென்று தொண்டைமண்டலத்தைக் கைப்பற்றியகாரணம்பற்றித் 'தொண்டைநாடுபரவின சோழன் பல்யானைக் கோக்கண்டனாயின ராசகேசரிவர்மன்[2]' என்று வழங்கப்பெற்றுள்ளனன். இவன் ஆட்சியிலேதான் சோழராச்சியம் உயர்நிலையை எய்தியது. இவன் கொங்குநாட்டைக் கைப்பற்றித் தலைக்காடு என்ற நகரையும் பிடித்துக்கொண்டான் என்ற 'கொங்குதேசராஜாக்கள்' என்னும் வரலாற்றுநூல் கூறுகின்றது[3]. ஆகவே, கொங்குநாட்டைக் கைப்

---

[1] Epigraphia Indica, Vol. XXI. No. 27.

[2] South Indian Inscriptions, Vol. III. No. 89

[3] செந்தமிழ்—தொகுதி 16, பக். 394.

பற்றிய இம்மன்னர்பிரான்[1] அந்நாட்டிலிருந்து பொன்கொணர்ந்து தில்லைச்சிற்றம்பலத்தைப் பொன்வேய்ந்திருத்தல்வேண்டும் என்பது நன்குதுணியப்படும். இவன் காவிரியாற்றின் இருமருங்கும் பல சிவலாயங்களைக் கற்றளிகளாக அமைத்த சிவபக்தன் என்று அன்பிற் செப்பேடுகள்[2] கூறுவது ஈண்டு அறியத்தக்கது.

இனி, இவ்வாதித்தன் புதல்வன் முதற்பராந்தகசோழன் என்பான் தில்லைச்சிற்றம்பலத்தைப் பொன்வேய்ந்தான் என்று ஆனைமங்கலச்செப்பேடுகளும்[3] திருவாலங்காட்டுச்செப்பேடுகளும்[4] உணர்த்துகின்றன. கொங்குதேசராசாக்கள் சரிதமும் இச்செய்தியை உறுதிப்படுத்துகின்றது. எனவே, முதற்பராந்தகசோழனது ஆட்சிக்காலத்திலும் தில்லைச்சிற்றம்பலம் மீண்டும் பொன்வேயப்பட்டது என்றுகொள்வதேபொருத்தமுடையதாகும். அங்ஙனமே, முதற்குலோத்துங்கசோழனது ஆட்சியின் 44-ஆம் ஆண்டாகிய கி. பி. 1114ல் அவன் தங்கை குந்தவையென்பாள் தில்லைக்கோயிலைப் பொன்வேய்ந்தனள் என்று அக்கோயிற் கல்வெட்டொன்று[5] அறிவிக்கின்றது. அவன் மகன் விக்கிரமசோழன் என்பான் கி. பி. 1128-ல் சிற்றம்பலத்தைச்சூழ்ந்த திருச்சுற்றுமாளிகையையும் திருக்கோபுரத்தையும் பொன்வேய்ந்தான் என்று அவன் மெய்க்கீர்த்தி கூறுகின்றது.[6] அவன் படைத்தலைவனாகிய மணவிற்கூத்தன் காலிங்கராயன் என்பவன் தில்லையிற் பொன்னம்பலத்தைப் பொன்வேய்ந்தான் என்று அங்குள்ள கல்வெட்டுக்களுள் ஒன்று

---

[1] முதற்பராந்தகன் கல்வெட்டுக்கள் கொங்குநாட்டிற் காணப்படுதலாலும் அவன் அதனைக் கைப்பற்றியதாகக் கூறிக்கொள்ளாமையாலும் அந்நாடு அவன் தந்தை முதல்ஆதித்தனால் கைப்பற்றப்பட்டிருத்தல்வேண்டும் என்பது திண்ணம்.

[2] Ep. Ind. Vol. XV, No. 5. Verse 18.

[3] Ibid. Vol. XXII, No. 34. Verse 17.

[4] S. I. I. Vol III, No. 205. Verse 53.

[5] Ep. Ind. Vol. V, No. 13 C.

[6] S. I. I. Vol. V, No. 458.

தெரிவிக்கின்றது[1]. விக்கிரமசோழன்மகனாகிய இரண்டாங்குலோத்துங்கசோழன் தில்லைச்சிற்றம்பலத்தையும் பிறவற்றையும் பொன் வேய்ந்தான் என்று இராசராசசோழனுலா உணர்த்துகின்றது.[2]

இவற்றையெல்லாம் கூர்ந்துநோக்குமிடத்து, சோழமன்னர் ஆட்சிக்காலங்களில் தில்லைச்சிற்றம்பலம் பன்முறை பொன்வேயப் பெற்றிருத்தல்வேண்டும் என்பது நன்குபுலனாகும். ஆனால், அதனை முதலில் பொன்வேய்ந்த சோழமன்னன் விசயாலயன்புதல்வனாகிய முதல்ஆதித்தனேயாவன் என்பது நம்பியாண்டார்நம்பியின் திருவாக்கினால் வெளியாகின்றது. இப்பெரியார், தம்காலத்தில் இவ்வேந்தன் அவ்வரும்பணியாற்றிய காரணம்பற்றி அச்செயலைத் தம் திருத்தொண்டர் திருவந்தாதியிற் பாராட்டியுள்ளனர் என்பது தெள்ளிது. இவர் சிதம்பரத்திற்கு அண்மையிலுள்ள திருநாரையூரிலிருந்தவராதலின் இவ்வரசன் தில்லையிற்புரிந்த அத்திருத்தொண்டில் தாம் நேரிற் கலந்துகொண்டு அதனை அறிந்திருத்தலும் இயல்பேயாம்.

ஆகவே, நம்பியாண்டார்நம்பி இவன் ஆட்சிக்காலமாகிய கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவராதல்வேண்டும். இக்கவிஞர்பெருமான் அந்நூலிலுள்ள 82-ஆம் பாடலில் இவன் சிவபெருமான் திருவடிநீழலெய்திய செய்தியையும் குறிப்பிடுதலால் இவனுக்குப் பிறகு கி. பி. 907ல் பட்டம்பெற்ற இவன்புதல்வன் முதற்பராந்தக சோழன் ஆட்சியின் முற்பகுதியிலும் சில ஆண்டுகள் வரையில் இருந்திருத்தல்கூடும்.[3]

---

[1] Ibid. Vol. IV. No. 225.

[2] இராசராசசோழன் உலா, வரிகள் 59—66.

[3] இவர் முதல்இராசராசசோழனைத் தம் திருத்தொண்டர்திருவந்தாதியிற் குறிப்பிடாமையொன்றே இவர் அவ்வேந்தன்காலத்தவரல்லர் என்பதை நன்குபுலப்படுத்துவதாகும்.

இனி, ஆதித்தன் சிங்களநாடுவென்ற செய்தியொன்று நம்பியாண்டார்நம்பியால் திருத்தொண்டர்திருவந்தாதியிற் சொல்லப்பட்டுள்ளது. அதனை உறுதிப்படுத்தக்கூடிய வேறுசான்றுகள் இந்நாளிற் கிடைக்கவில்லை. எனினும், அதனை எளிதாகத் தள்ளிவிட இயலவில்லை. சோழர் பேரரசை நிறுவும்பொருட்டு வடக்கும் மேற்கும் படையெடுத்துச்சென்று முறையே தொண்டைமண்டலத்தையும் கொங்குமண்டலத்தையும் கைப்பற்றித் தன் ஆளுகையின்கீழ்க் கொண்டுவந்த இம்மன்னர்பிரான் தென்கிழக்கேயுள்ள சிங்களநாடாகிய ஈழமண்டலத்தின்மேலும் படையெடுத்துச்சென்றிருத்தல்கூடும். இவன் புதல்வன் முதற்பராந்தகசோழன் அந்நாட்டின்மேல் படையெடுத்துச்சென்று அதனைக் கைப்பற்றினான் என்பது அவன் கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது. எனவே, ஆதித்தசோழன் முதலில் தொடங்கிய அச்செயலை அவன்புதல்வன் தன் ஆட்சியில் நிறைவேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆகவே, ஆதித்தனது சிங்களநாட்டுப் படையெழுச்சியைப்பற்றி நம்பியாண்டார்நம்பிகூறியிருப்பது சிறிதும் புனைந்துரையாகாதென்க.

இனி, திருமுறைகண்டபுராணத்திற் கூறப்பெற்றுள்ள இராசராசன் அபயகுலசேகரன் என்பான் யாவன் என்பது ஆராயற்பாலதாம். அவ்வேந்தனை முதல் இராசராசசோழன் எனக் கருதி, அவன்காலத்திலிருந்தவர் நம்பியாண்டார்நம்பி என்று ஆராய்ச்சியாளரெல்லோரும் உறுதிசெய்துள்ளனர். திருமுறைகண்டபுராணம் பிற்காலத்தில் எழுதப்பெற்ற ஒருநூலாகும். அதனை உமாபதிசிவாசாரியர் பாடினார் என்று கூறுகின்றனர். அதற்குத் தக்க சான்றுகள் இல்லை. அப்புராணத்தில் கூறப்பட்டுள்ள அரசன்பெயரே ஐயத்திற்கு இடந்தருகின்றது. இராசராசன் என்று கூறிய அதன் ஆசிரியர் அதனோடு அமையாமல் அபயகுலசேகரன் என்ற பிறிதொருபெயரும் குறித்துள்ளனர்.

சோழமன்னர்களுள் முதற்குலோத்துங்கசோழனுக்கு அபயன் என்ற பெயர் வழங்கியுள்ளது என்பது கலிங்கத்துப்பரணியாலும்

அவன் கல்வெட்டுக்களாலும் புலப்படுகின்றது.[1] அவனுக்குப் பிறகு அவன் பெயரன் இரண்டாங்குலோத்துங்கனுக்கும் அப் பெயர் வழங்கிவந்தமை குலோத்துங்கசோழன்பிள்ளைத்தமிழா லும்[2] உலாவினாலும்[3] நன்கறியக்கிடக்கின்றது. எனவே, அப் பெயர் முதல் இராசராசசோழனைக்குறிக்கும் என்று கொள்வது எங்ஙனம் பொருந்தும்?[4] அன்றியும், குலசேகரன் என்னும்பெயர் இதுகாறும் ஆராய்ந்து கண்ட அளவிற் சோழமன்னருள் யாருக் கும் இருந்ததாகத் தெரியவில்லை. அப்பெயருடைய சில பாண்டிய மன்னரும் சேரமன்னரும் உள்ளனர் என்பது கல்வெட்டுக்க ளாலும் தமிழ்நூல்களாலும் புலப்படுகின்றது. ஆகவே, அபய குலசேகரன் என்பது படைத்துமொழிந்த பெயராகக் காணப்படு கிறதேயன்றி உண்மையில்வாழ்ந்த ஒருசோழமன்னன் பெயராகப் புலப்படவில்லை. இராசராசன் என்னும்பெயருடைய சோழமன்னர் மூவர் உள்ளனர். எனினும் வீரராசேந்திரன்[5] விக்கிரமன்[6] முத லான சோழமன்னர்களும் சில பாண்டிவேந்தர்களும்[7] தம்மை இராசராசன் என்று கூறிக்கொள்வதைக் கல்வெட்டுக்களிற் காண லாம். ஆகவே, இராசராசன் என்பது அக்காலங்களில் அரசர்கட்குப் பொதுப்பெயராகவும் இருந்தது எனலாம். இந்நிலையில் தெளி வின்றியமைந்துள்ள இராசராசஅபயகுலசேகரன் என்ற தொடர் முதல்இராசராசசோழனைக்குறிக்குமென்று கருதுவது எவ்வாற்று னும் பொருந்தாதென்க.

---

[1] கலிங்கத்துப்பரணி, பாக்கள், 2 4 12 16 42 82 88. S. I. I. Vol. IV, No. 1338. Travancore Archaeological Series, Vol. IV, pp. 130—39.

[2] குலோத்துங்கசோழன்பிள்ளைத்தமிழ், பாக். 3, 4, 6, 8, 10, 11, 45.

[3] குலோத்துங்கசோழனுலா, வரிகள், 298, 317.

[4] முதல்இராசராசனுக்கு அபயன் என்று பெயர் வழங்கவில்லை என்பது கல்வெட்டுக்களால் நன்கு புலப்படுகின்றது.

[5] Ep Ind. Vol. XXI, No. 38.

[6] Epigraphia Carnatica, Vol. X, Sd. 8 (b)

[7] S. I. I. Vol. VIII, No. 247.

முதல் இராசராசசோழன் என்பான் நம்பியாண்டார்நம்பியின் துணைகொண்டு சமயகுரவர்மூவர் திருப்பதிகங்களையும் தேடிக் கண்டனன் என்னுங் கொள்கைக்கு முரணாக, அவ்வேந்தனுடைய முன்னோர்களான முதல் ஆதித்தன், முதற்பராந்தகன், உத்தமசோழன் ஆகிய சோழமன்னர்களின் ஆட்சிக்காலங்களிற் கோயில்களில் அம்மூவருடையபதிகங்களையும் நாள்தோறும் பாடுவதற்கு நிவந்தங்கள் அளிக்கப்பெற்றுள்ளன. இவ்வுண்மையை அவர்களுடைய ஆட்சியிற் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டுக்களால் நன்கறியலாம். முதல் ஆதித்தசோழனாட்சியில் கி. பி. 873ல் திருஎறும்பியூரிலும்[1] கி. பி. 876ல் பழுவூரிலும்[2] முதற்பராந்தகசோழனாட்சியில் கி. பி. 910ல் திருவாவடுதுறையிலும்[3] கி.பி. 911ல் அல்லூரிலும்[4] கி. பி. 944ல் திருத்தவத்துறையிலும்[5] உத்தமசோழனாட்சியில் கி. பி. 977ல் கோனேரிராசபுரம்[6] என்னும் திருநல்லத்திலும் கி. பி. 984ல் அந்துவநல்லூரிலும்[7] திருப்பதிகங்கள் பாடுவதற்கு நிவந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் முதல் இராசராசசோழனாட்சிக்குமுன்னர் நிகழ்ந்தவையாகும். எனவே, அம்மன்னனாட்சிக்காலத்திற்குப் பல ஆண்டுகட்குமுன்பே சமயகுரவர்மூவருடைய திருப்பதிகங்களும் கோயில்களிற் பாடப்பெற்று வழக்கிலிருந்துவந்தன என்பது வெளிப்படை. ஆகவே நம்பியாண்டார்நம்பியின் துணைகொண்டு திருமுறைகண்டவன் முதல் இராசராசசோழன் என்று கூறுவது ஏற்புடைத்தன்றாம்.

இதுகாறும் ஆராய்ந்தவாற்றால் நம்பியாண்டார்நம்பி முதல் இராசராசசோழன்காலத்திலிருந்தவரல்லர் என்பதும், முதல் ஆதித்தசோழனாட்சிக்காலத்திலும் அவன் புதல்வன் முதற்பராந்தகசோழனாட்சியின் முற்பகுதியிலும் இருந்தவராவர் என்பதும் நன்குவிளங்குதல் காண்க. எனவே, இப்புலவர்பெருமான் கி. பி. ஒன்பதாம்நூற்றாண்டின் இறுதியிலும் பத்தாம்நூற்றாண்டின் முற்பகுதியிலும் நம் தமிழகத்தில் வாழ்ந்தவர் என்பது தெள்ளிது.

---

[1] Ins. 129 of 1914. [2] Ins. 349 of 1918. [3] Ins. 139 of 1925. [4] S. I. I. Vol. VIII No. 687. [5] Ins. 99 of 1929. [6] S. I. I. Vol. III. No. 151 A. [7] I bid, No. 139.

உ

# அண்ணாமலை மன்னன்

உயர்திரு. கவிமணி. சி. தேசிகவிநாயகம்பிள்ளையவர்கள்

1 அன்னமிடு சத்திரமாம் ஆதுலர்கள் சாலையாம்
மன்னுகலை ஓங்கி வளரிடமாம்—இன்னமுதம்
பண்ணார் பசுந்தமிழிற் பாவாணர் பாடுபுகழ்
அண்ணா மலைமன் அருள்.

2 தில்லைப் பதியுடையான் சிற்றம்பலந் தன்னில்
அல்லும் பகலும்நின் றாடுகின்றான்—எல்லைக்கண்
அண்ணா மலைமன் அமைத்த கலைக்கழகம்
கண்ணாரக் கண்டு களித்து.

3 தத்தளித்து நின்ற தமிழிசைச் செல்விக்குப்
புத்துயிரை ஊட்டியநற் புண்ணியவான்—பத்தியுடன்
எண்ணான் கறமும் இனிதா வளர்த்துமகிழ்
அண்ணா மலைமன்ன னாம்.

4 பூவாரம் தந்திடுவான் பொன்னாடை போர்த்திடுவான்
நாவார நல்லுரையும் நல்கிடுவான்—பாவாணர்க்
கன்புசெய் திந்நாளில் அண்ணா மலைமன்போல்
இன்படைவா ருண்டோ இசை.

5 ஐயம் அகல உண்மைகளை
ஆய்ந்து காணும் அறிவுடையோன்
செய்யும் வினைகள் ஒவ்வொன்றும்
திருந்தச் செய்யுந் திறம்பெற்றோன்
கையிற் கொண்ட கருங்கல்லும்
கனகஞ் சொரியச் செய்திடுவான்
வையம் புகழும் தனவணிகர்
மணியாம் அண்ணா மலைமன்னே.

6 தில்லைப் பதியிற் பல்கலையும்
செழித்து வளர இடங்கண்டோன்
இல்லை யென்னு தெவ்வெவர்க்கும்
ஈந்து மகிழும் இயல்புடையோன்
சொல்லை மறவாப் புகழ்வேந்தன்
சுற்றம் தழுவும் திருவாளன்
நல்லன் அண்ணா மலைமன்னன்
நாட்டுக் கணியாய் வாழுகவே.

7 உள்ள முருகச் செவிகுளிர
ஓதும் நாவில் அமுதூறத்
தெள்ளத் தெளிந்த செந்தமிழின்
தெய்வ கீதம் செழித்தோங்க
எள்ளத் தனையும் சலியாமல்
இரவும் பகலும் உழைத்திடுநம்
வள்ளல் அண்ணா மலைமன்னன்
வாழ்க வாழ்க வாழ்கவே.

8 பாரி பாரி யென்றுகவி
பாடும் புலவர் புகழ்பாட
வாரி வாரி வழங்கிடுநம்
வள்ளல் அண்ணா மலைமன்னற்
கோரும் ஜாதி மதபேதம்
ஒன்றும் நோக்கா தெழுந்துலகில்
நீரைப் பொழியும் மேகமலால்
நிகர்வே றுண்டோ நிகழ்த்துவிரே.

9 உருகி அன்பு பெருகிவழிந்
தோடி யொழுக எதிர்வந்து
வருக வருக வருகவென
மதுர மொழிகள் பலகூறி
அருகி லமரச் செய்தென்னோ
டளவ ளாவி அமுதளித்த
தருகை நீண்ட பெருந்தகையின்
தருமம் ஓங்கி வளருகவே.

10 நாடு சேர்ந்த நல்லவையில்
நடுநா யகமா யெழுந்தருளி
ஈடி லாத பொன்னுடை
எவரும் காண எனக்கணிந்து
பீடு மிகவே பெறவைத்த
பெரியன் அண்ணா மலைமன்னன்
நீடுவாழ ஈசனை யான்
நித்தம் நித்தம் தொழுவேனே.

11 அம்பொன் வேய்ந்த அரும்புகழும்
அமுதம்* கொணர்ந்த பெரும்புகழும்
இம்பர் ஒருங்கு பெற்றகுலத்
தெழுந்த அண்ணா மலைமன்னன்
பம்பு மூட இருளகற்றும்
பானு வாகி நல்லறங்கள்
நம்பி உலகில் நிதம்வளர
நன்மை செய்து வாழுகவே.

12 காந்தி யடிகள் திருவுள்ளம்
கனிந்து போற்றும் குருதேவன்
ஆய்ந்த அகில கலையாளன்
அண்ணல் தாகூர் அமைத்தவுயர்
சாந்தி நிகேதப் பெரும்பொழிலில்
தமிழும் கமழச் செய்துபுகழ்
ஏந்தும் அண்ணா மலைமன்னர்
என்றும் வாழ்க வாழ்கவே.

---

* அமுதம் - நீர்.

# கச்சிக்கலம்பக அரங்கேற்றவைபவம்

55-ஆண்டுகளுக்குமுன் பேராசிரியராய்விளங்கிய இராவ்பகதூர் பூண்டி அரங்கநாதமுதலியார் இயற்றிய கச்சிக்கலம்பகம் 1899-ம் ஆண்டில் சென்னைத் தொண்டைமண்டல வித்தியாசாலைமண்டபத்தில் அரங்கேற்றப் பட்டபோது நடந்த பிரசங்கவைபவசங்கிரகம் (திருமயிலைவித்துவான் சண்முகம்பிள்ளையவர்கள்பாடிய 20 பாக்கள்) முன்னரே செந்தமிழ் ௪௩-ஆம் தொகுதியில் ௪௯ முதல் ௫௨ வரையுள்ள பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டதைத் தமிழறிஞர்கள் படித் தின்புற்றிருக்கலாம். அவ்வரங்கேற்ற சமயத்தில் பேராசிரியரின் அரிய நண்பரும் தமிழ்ப்பேரறிஞருமாகிய தண்டலம் பாலசுந்தர முதலியார் (Munshi to the Tamil Translator to the Madras Government) தமிழ்மாதைநோக்கிக்கூறிய அகவற்பாவை ஈண்டுத் தருகின்றோம்.

**நேரிசையாசிரியப்பா.**

சீர்மலி வேதச் சிரமெனக் கொளீஇ
நார்மலி யன்பர்நெஞ் சகநனி மரீஇய
மைதிகழ் கண்டனை மழவிடை தணந்து
வைதிகப் பரிமிசை வரச்செய்வான் புலவனும்
பஞ்சவன் கூனொடு பாழ்ஞ்சமண் பாற்றிய
விஞ்சுசீர் வேணு புரவே தியனும்
நீற்றழன் மேனி நெடுந்தகை யருளால்
நீற்றறை யினின்வெளி வந்தநின் மலனும்
அரிவை பாகத் தமலனை யன்றோர்
அரிவைபாற் றாதுகொண் டருளிய விபுதனுங்
கழறிற் றறிவா ரெனுங்கலைக் குரிசிலும்
அண்ட முறநிமிர்ந் தாடிய நடனங்
கண்டு பாடிய காத லம்மையுங்
கனல்விட முண்ட கண்டன்முன் மிசைய
உனலருங் களியமு தூட்டிய வொருவனுந்
தொண்டர்க டஞ்சீர்த் தொகைவகை விரியாப்
பண்டைய வன்பாற் பாடிய புலவனுந்
தொடுத்தபா வலங்க லெனுந்தொகை மாலை
கடக்கரு மன்பாற் கவின்பெற வணைந்து
மதிச்சடை யொருவனை மணிமுடி கவித்தவெண்
கதிர்க்குலம் வருகருங் கயற்கணெம் பிராட்டி
அன்பா லரசுவீற் றிருந்தநன் ஞாட்டின்
தன்பால் வளர்ந்த தண்டமிழ் மாதே
பொருவரு நின்சீர் புகலுநெறி யறியா

ஒருசிறி யேனிங் குரைக்குவன் கேண்மதி
நின்னர சிழந்து நிலைதடு மாறி
நன்னெடுங் கால நலிந்தனை யாதலின்
இற்றை ஞான்றுனக் கெய்துதவ மேதவஞ்
சொற்றிட லாவதோ வன்றே துணிந்திட்
டெங்குல மணிவிளக் கெனத்தகு பூண்டி
மங்கல நகருடை மாண்புவி செய்தவம்
எனவந் துதித்த விருங்குணக் குரிசில்
இரங்குநர்க் கருளுமே கம்பரைப் பழிச்சுறூஉம்
அரங்க நாத வபிதான மேரு
சொன்மலி கச்சிக் கலம்பக மென்னும்
நன்மணி முடியை நயந்து புனைந்து
கொடுக்க மற்றதனைக் கோசலை மகற்கன்
றலகில்சால் சிறப்பி னரும்புலவ ரேத்தக்
கடக்கருந் தவவலிக் கடவுண் மாமுனி
வசிட்டன் மேனாள் சூட்டியது மான
விசிட்ட நன்னெறி வித்தகன் கச்சிச்
சிவஞானி தாண்மலர் சிந்தைவைத் தேத்தியே
அவஞான நீக்கிய வருந்தவ வைப்பாய்
எனக்கு மியற்றமி ழினிதிவ ணுணர்த்திய
தனிப்பெருங் கருணைத் தவப்பெருங் கொண்டல்
அராவணி வாணிக ரருமறைப் பேழை
இராம லிங்க முனிவர னின்று
சூட்டிய பெருமிதஞ் சொலற் களவின்றே
ஆதலிற் றென்னாட் டருந்தமிழ்ச் சங்கமென்
றேதுறு சீர்த்திசா லோங்கு நானில
வளாகத் தத்தாணி வயங்கிடப் பூண்டு
கச்சிக் கலம்ப கப்பா மாலை
உச்சிமேற் புலவர்கொண் டோதிடப் புகன்ற
ஒருபெரும் புலவர் முதலிய வரவராம்
அருமருந் தன்ன வமைச்சரொடு மரீஇப்
பொருவரு மரசு புரிந்து
கரிசறு புகழொடுங் கவின வாழியவே.

[இங்கே குறிப்பிடப்பட்ட இராமலிங்கமுனிவர் சிதம்பரம் ஈசானிய மடம் இராமலிங்கசுவாமிகளெனும் வீரசைவப்புலவராவர். இவர் திருவிளையாடற்புராணம், பெரியபுராணவுரை, சிவப்பிரகாசர்பிரபந்தத்திரட்டு, குமாரகுருபரர்பிரபந்தத்திரட்டு, வாயுசங்கிதை, நால்வர்நான்மணிமாலையுரை முதலிய பலநூல்களை அச்சிட்டவர்; தமிழ்ப்பண்டிதர் திருவேங்கடநாயுடு, இராமலிங்கத்தம்பிரான்முதலியவர்களுக்கு ஆசிரியர்; 1905-ம் ஆண்டில் சென்னையில் இறந்தார்.]

சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை.